பக்கங்கள் - 12+II
விலை - ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 216

செவ்வாய்க்கிழமை
01 ஜூலை 2025

ஆனி 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## எகிறியது எரிபொருள் விலை!

கொழும்பு, ஜூலை 1
பெற்றோல் உள்ளிட்ட அனைத்து எரிபொருள்களின் விலைகளும், அதிகரித்துள்ளதாக இலங்கை ☞ 11

## செம்மணிப் புதைகுழிகளுக்கு நீதி கிடைத்தே ஆகவேண்டும்

### அமைச்சர் சந்திரசேகர் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஜூலை 1
செம்மணிப் புதைகுழிகளுக்கு நீதி கிடைத்தாகவேண்டும். இதில் மாற்றுக் கருத்துகளுக்கு இடமில்லை - இவ்வாறு அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார். ☞ 11

செம்மணிப் புதைகுழி விவகாரம்

## செயற்கை நுண்ணறிவால் விசாரணைகள் சீர்குலைவு

### கடும் நடவடிக்கை எடுக்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 1
செம்மணி மனிதப் புதைகுழியில் அடையாளம் காணப்படும் என்புச் சிதிலங்கள் மற்றும் சான்றுப் பொருள்களை அடிப்படையாக வைத்து உருவாக்கப்படும் செயற்கை நுண்ணறிவுப் படங்கள், குற்றவியல் விசாரணைகளை சீர்குலைக்கின்றன என எச்சரிக்கப்பட்டுள்ளது. ☞ 11



செம்மணிப் புதைகுழி

## அவதானிக்கப்பட்ட சிதிலங்களை மீட்கும் பணிகள் துரிதகதியில்!

### நேற்றுப் பாதணியொன்று அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்ப்பாணம் செம்மணி மனிதப் புதைகுழியின் நேற்றைய அகழ்வின்போது, பாதணியொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதுவரை அவதானிக்கப்பட்டு முற்றாக மீட்கப்படாமல் ☞ 11

*35 ஆண்டுகளின் பின்*

## மாவிட்டபுரம் கந்தசுவாமிக்கு மஹோற்சவப் பெருவிழா



யாழ்ப்பாணம், ஜூலை 1
வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் மஹோற்சவப் பெருந் திருவிழா 35 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்றுத் திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.
தொடர்ந்து 25 தினங்கள் ☞ 11

கிளிநொச்சியில்

## 79 கிலோ கஞ்சாவுடன் குடும்பப்பெண் கைது!

கிளிநொச்சி, ஜூலை 1
கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் 79 கிலோ 245 கிராம் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பப் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைய வீடொன்றைச் சோதனையிட்டபோதே மேற்படி கஞ்சாப் பொதிகள் ☞ 11

## வாகனத்தில் கஞ்சா கடத்தல் 29 கிலோ கஞ்சா மீட்பு!

முல்லைத்தீவு, ஜூலை 1
முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் வாகனத்தில் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 29 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.
ஹன்டர் ரக வாகனத்தில் சூட்சுமமான முறையில் கஞ்சா கடத்தப்படுவதாக இராணுவப் புலனாய்வுப் ☞ 11

## இந்தியப் படகுகள் மூழ்கடிப்பு ஓரிரு நாள்களில் இறுதிமுடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 1
அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்காக இந்திய மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 124 இந்திய இழுவைப்படகுகள் மயிலிட்டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் படகுகள் ☞ 11



முச்சந்தி முரளி

'ஒருபக்கம் புதைகுழி இன்னொரு பக்கம் போதைக்குழி எண்டு எல்லாப் பக்கமும் அழிவுதான் கண்டியளோ'



## பூநகரியில் கோரவிபத்து ஐந்து பேருக்கு படுகாயம்

### ஹைஏஸ், மோட்டார்சைக்கிள் எரிந்தழிந்தன

கிளிநொச்சி, ஜூலை 1
பூநகரி மன்னார் வீதியின் பூநகரி தம்பிராய் பகுதியில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் இரண்டு சிறுமிகள் உட்பட ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹைஏஸ் வாகனமும், மோட்டார்சைக்கிளுமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளன. இதன்போது மோட்டார்சைக்கிள் தீப்பற்றி எரிந்த நிலையில், அந்தத் தீ ஹைஏஸ் வாகனத்திலும் ☞ 11

## நீராடச் சென்ற இளைஞர் தண்ணீரில் மூழ்கிப்பலி!



மன்னார், ஜூலை 1
மன்னார் - முசலி 4ஆம் கட்டைப் பகுதியில் உள்ள பாலத்தில் நீராடுவதற்காகச் சென்ற இளைஞர் நீருடன் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ☞ 11

## நெடுந்தீவு பிரதேசசபை; தமிழரசுக் கட்சி ஆட்சி!



யாழ்ப்பாணம், ஜூலை 1
நெடுந்தீவு பிரதேசசபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது. தவிசாளராக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சங்கரப்பிள்ளை சத்தியவரதன் தெரிவுசெய்யப்பட்டுள் ☞ 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 29.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4118 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 11 46 76 78 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1185 |
| வெற்றி இலக்கினம் | [illegible] |
| வெற்றி இலக்கங்கள் | 02 14 30 60 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0144 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 4 2 7 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2224 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 32 43 70 76 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5876 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 8 2 6 8 1 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1906 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 10 23 29 36 |
| விசேட எழுத்து | U |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0451 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 1 4 |

# ஷிராந்தி கைதாவதைத் தடுக்க மஹிந்த பெரும் பிரயத்தனம்?

**கொழும்பு, ஜூலை 1**

**முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஷிராந்தி ராஜபக்ச விரைவில் கைது செய்யப்படலாம் என்றும், அதைத்தடுக்க மஹிந்த ராஜபக்ச மல்வத்தே மகாநாயகரை நாடியுள்ளார் என்றும் தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

"சிரிலிய சவிய" கணக்குத் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளின் அடிப்படையிலேயே ஷிராந்தி ராஜபக்ச கைதுசெய்யப்படலாம் என்று ஊகிக்கப்படுகின்றது. ஷிராந்தி ராஜபக்சவின் சகோதரரும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான நிஷாந்த விக்ரமசிங்க கடந்த வாரம் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இந்த நிலையில் அண்மையில் மல்வத்தே மகாநாயக்கரைச் சந்தித்த மஹிந்த ராஜபக்ச, ஷிராந்தி ராஜபக்சவைக் கைது செய்யும் நடவடிக்கைகளை எடுக்கவேண்டாம் என்று ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று கோரினார் என்றும், ஆனால் மல்வத்தே மகாநாயகர் அதை நிராகரித்துள்ளார் என்றும் தெற்கு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆயினும் அது உறுதிப்படுத்தப்படவில்லை. (எ-இ)



# ஜனாதிபதியாகும் எண்ணம் இல்லை

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

ஜனாதிபதியாகும் ஆசை இல்லை, எனக்கு வழங்கப்பட்ட பணியை வெற்றிகரமாக முடித்துவைப்பதே எனது ஆசை என்று தெரிவித்துள்ளார் பிரதமர் ஹரிணி அமரசூரிய இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2030ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் எமக்குச் சவாலாக மாறமுடியாது. நாமல் ராஜபக்ச, சஜித் பிரேமதாஸவால்கூட இயலாது. எங்களைத் தோற்கடிப்பதாகவிருந்தால் எங்களைவிடவும் சிறந்த முறையில் வேலை செய்யக்கூடியவர்களால் மாத்திரமே முடியும்.

இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக மக்கள் எங்களுக்கு ஆணை வழங்கியுள்ளார்கள். அதை நாங்கள் செய்துகொண்டுபோகிறோம். யாரும் இதுவரை செய்யாத புதுமையான விதத்தில் நாட்டைக் கட்டியெழுப்புகிறோம். திருட்டுகள் ஒழிக்கப்படவேண்டும்.

திருடர்கள் தண்டிக்கப்படவேண்டும். கல்வி ,பொருளாதாரம், உட்கட்டமைப்பு என அனைத்தும் முன்னேற்றம் காணவேண்டும்-என்றார். (எ-75)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | 30.06.2025 | |
| தினம் | திங்கட்க்கிழமை | |
| வெற்றி வாரம் | 0584 | |
| ஆங்கில எழுத்து | Y | |
| வெற்றி இலக்கம் | 7 5 6 1 5 1 | |

| Super Ball | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| தினம் | திங்கட்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2850 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கம் | 31 45 60 71 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| தினம் | திங்கட்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கம் | 06 11 21 28 |
| வெற்றி வாரம் | 5011 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| தினம் | திங்கட்க்கிழமை |
| கன்னி | ♍ |
| வெற்றி இலக்கம் | 13 33 36 46 |
| சீட்டிழுப்பு வாரம் | 4562 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| தினம் | திங்கட்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 16 |
| வெற்றி இலக்கம் | 10 27 35 63 |
| வெற்றி வாரம் | 2024 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| தினம் | திங்கட்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | K |
| வெற்றி இலக்கம் | 03 08 17 20 |
| வெற்றி வாரம் | 2676 |

| JAYODA | |
|---|---|
| திகதி | 30.06.2025 |
| தினம் | திங்கட்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கம் | 25 39 44 64 |
| வெற்றி வாரம் | 2639 |

# நீதி அமைச்சின் மேலதிக செயலராக மதுமதி நியமனம்

கொழும்பு, ஜூலை 1

நீதி அமைச்சின் மேலதிக செயலாளராக திருமதி மதுமதி வசந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராயைச் சேர்ந்த மதுமதி இலங்கை நிர்வாக சேவை அதி சிறப்புத் தரத்தை அண்மையில் நிறைவுசெய்திருந்தார். இவர் உடுவில் பிரதேச செயலாளர், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எனப் பல பதவிகளை வகித்த நிலையில் இறுதியாக வடமாகாண தபால்மா அதிப்ராகக் கடமையாற்றியிருந்தார். தற்போது நீதி அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (எ-27)

# மதத்தலைவர்களை இழுத்து அரசு மோசமான பரப்புரை!

## நாமல் ராஜபக்ச கொதிப்பு

கொழும்பு, ஜூலை 1

ஷிராந்தி ராஜபக்சவைக் கைதுசெய்வதைத் தடுக்க மஹிந்த ராஜபக்ச மல்வத்தே மகாநாயக்கரை நாடினார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளநிலையில், நாடாளுமன்ற உறுப்பினரும், மஹிந்த ராஜபக்சவின் மகனுமான நாமல் ராஜபக்ச கடும் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளார். தனது குடும்பத்தினர் முன்னுரிமை பெறாது விசாரணைகளுக்கு முகங்கொடுத்துவருகின்றனர் என்றும், நாட்டின் நீதித்துறைமீது தமக்கு நம்பிக்கை உள்ளது என்றும் அவர் சமூகவலைத்தளக் கணக்கில் பதிவிட்டுள்ள பதிவொன்றில் குறிப்பிட்டுள்ளார். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தவறான பரப்புரைகள், நற்பெயரைக் களங்கப்படுத்துவது ஊடாகத் தனது தோல்விகளை மறைக்க முயற்சிக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். அரசாங்கம் மரியாதைக்குரிய சமயத் தலைவர்களை அரசியல் சர்ச்சைகளில் இழுக்கின்றது என்று தெரிவித்துள்ள நாமல் ராஜபக்ச, இது மகாசங்கத்தினருக்குப் பெரும் அவமரியாதை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்களைத் தவறாக வழிநடத்துவதை நிறுத்திவிட்டு, அதற்குப் பதிலாக பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் கவனம்செலுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# ஊழல்வாதிகள் கைதுக்கு வழியேற்படுத்தியது நாமே!

## விஜேதாச ராஜபக்ச பெருமிதம்

தற்போதைய அரசாங்கம் ஊழல்வாதிகளைக் கைதுசெய்வது நல்லவிடயம். அதற்குக் காரணம் நான்தான் என்று கூறியுள்ளார் முன்னாள் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போதைய அரசாங்கம் ஊழல் மோசடிகளுக்கு எதிராக ஊழல்வாதிகளுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கியுள்ளது. அதற்கு அடித்தளமிட்டது நாமே. 2004ஆம் ஆண்டு சந்திரிகாவின் ஆட்சியில் ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் எதிர்ப்பு பிரகடனத்தில் கையொப்பமிட்டோம். அதற்கு ஏற்ப சட்டம் உருவாக்கப்படவேண்டும். 2015ஆம் ஆண்டுவரை அதை எவரும் செய்யவில்லை. நான் அதற்கான குழுவொன்றை நியமித்து சட்டவரைவு ஒன்றைத் தயாரித்தபோது 2017ஆம் ஆண்டு என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கினார்கள். 2022ஆம் ஆண்டு மே மாதம் நாம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியதும் 24 மணிநேரத்தில் 21ஆம் திருத்தச்சட்டவரைவை அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தேன். ஊழல் எதிர்ப்புச் சட்டவரைவுக்கு ஒரு வாரத்துக்குள் அமைச்சரவை அனுமதியைப் பெற்றேன். ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினோம். ஆசியாவில் மிகவும் சிறந்த சட்டமாக அது உள்ளது. நாம் இந்த சட்டத்தை நிறைவேற்றியதால்தான் தற்போதைய அரசாங்கத்தால் மிகவும் இலகுவாக ஊழலுக்கு எதிராக செயற்படமுடிகிறது-என்றார். (எ-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரத் திருத்தச் சட்டவரைவின் பிரிவுகள் அரசமைப்புக்கு முரண்!

## உயர்நீதிமன்றம் வியாக்கியானம்



**கொழும்பு, ஜூலை 1**

**மின்சாரத் திருத்தச்சட்டம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானத்தை நேற்று நாடாளுமன்றத்தில் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலிஹ் அறிவித்துள்ளார்.**

மின்சாரத் திருத்தச் சட்டவரைவில் சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரணானவை. நாடாளுமன்றத்தில் சிறப்புப் பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கலாம் என்றும், அதேநேரம் அது வாக்கெடுப்பில் மக்களால் அங்கீகரிக்கப்படவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் தனது வியாக்கியானத்தில் தெரிவித்துள்ளது. ஆயினும் நீதிமன்றத்தால் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டால் நாடாளுமன்றத்தில் எளிய பெரும்பான்மையுடன் அங்கீகரிக்கமுடியும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது என்று பிரதி சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# யாப்பாவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, ஜூலை 1

முன்னாள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன மற்றும் இலங்கை முதலீட்டுச்சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜயந்த எதிரிசிங்க ஆகியோருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை நேற்றுத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ச பதவியேற்றபின்னர் இரண்டாம் ஆண்டு விழாவுக்காக இலங்கை முதலீட்டுச் சபையின் நிதியைப் பயன்படுத்தி செய்தித்தாள்களில் விளம்பரங்கள் பிரசுரித்ததன் மூலம் அரசாங்கத்துக்கு 1.7 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்தியமை தொடர்பாக இவர்கள் இருவருக்கும் எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# மஹிந்தவுடன் எதுவும் பேசவில்லை மல்வத்து மகாவிகாரை அறிக்கை!

கொழும்பு, ஜூலை 1

ஷிராந்தி ராஜபக்சவின் கைது தொடர்பாக மஹிந்த ராஜபக்ச மல்வத்து மகாநாயக்க தேரரிடம் கோரிக்கை விடுத்தார் என்று உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்படுகின்றன என்று மல்வத்து மகாவிகாரை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. மல்வத்து மகா விகாரையின் பிரதிப் பதிவாளர் மஹாவெல ரத்தனபால தேரர், மகாநாயக்க தேரரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார். எந்தச் சந்திப்பும் அல்லது தொலைபேசி உரையாடலும் நடைபெறவில்லை. இதுபோன்ற தவறான செய்திகளை உருவாக்கிப் பரப்புவதன் ஊடாக தேவையற்ற பொது அமைதியின்மையை உருவாக்க முயற்சிக்கும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளுக்கு எதிராக எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொலிஸ் பேச்சாளராக வுட்லர் நியமனம்

கொழும்பு, ஜூலை 1


பொலிஸ் ஊடகப் பேச்சாளராக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எப்.யூ. வுட்லர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தற்போது பொலநறுவைப் பொலிஸ் பிராந்தியத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# இலத்திரனியல் பொருள்கள் கடத்தியவர் கைது

கொழும்பு, ஜூலை 1

6 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய இலத்திரனியல் பொருள்களை சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவந்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவர் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்து நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவிசாவளையைச்சேர்ந்த 22 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டவராவார். சந்தேகநபரிடம் இருந்து கையடக்கத் தொலைபேசிகள், ரப் கணினிகள் மற்றும் 238 கணினிகள் போன்ற இலத்திரனியல் உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் சுங்க அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-இ)





# வரியால் அதிகரித்துள்ள புத்தகங்களின் விலை

கொழும்பு, ஜூலை 1

அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி விதிக்கப்பட்டுள்ளதால் புத்தகங்களின் விலைகள் 20 சதவீதத்தால் அதிகரித்துள்ளன என்று தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தேசிய புத்தக வர்த்தகர்கள் சங்கத்தின் வருடாந்த விழாவில் உரையாற்றிய இலங்கைப் புத்தக வெளியீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் சமந்த இந்தீவர தெரிவித்துள்ளதாவது-

முன்னர் எழுதுபொருள்கள் உட்பட பல உத்தியோகபூர்வப் பொருள்களுக்கு 15 வீத வற்வரி இருந்தது. ஆனால் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கு வற்வரி விதிக்கப்படவில்லை. தற்போது நேரடியாக 18 வீதம் வரைக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறையால் புத்தக விற்பனை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)




## கார்ட் இருக்கு, காசு எங்க? - 2

'கார்ட்' இருக்க பள்ளிக்கூடப் பெடியள் எப்பிடிக் காசை விழுங்கினவங்கள் எண்டு கடுமையா யோசிக்கத் தேவையில்லை. ஒரு ஏ.ரி.எம். கார்ட்டின்ர முன்பக்கத்தில இருக்கிற பதினாறு நம்பரும், அதின்ர காலாவதித்திகதியும், பின்பக்கத்தில இருக்கிற மூண்டு நம்பரும் தெரிஞ்சாலே காணும். கார்ட் இல்லாமலே கதகளி ஆடலாம். ஒன்லைனில சாமன்கள் வாங்கிறதில இருந்து, ரிக்கெற் புக்கிங் எண்டு எல்லாமே இந்த நம்பர்களை வைச்சே செய்யலாம். கனபேருக்கு இந்த விசயம் தெரியாது. கார்ட் கையில இருந்தால் ஒருத்தரும் விளையாட்டுக் காட்டேலாது எண்டுதான் நம்பிக் கொண்டிருக்கினம். ஆனால் இப்பத்தைச் சின்னப்பெடியளுக்கு உந்த விசயங்கள் எல்லாம் அத்துப்படி. இது அந்த சுகாதாரப் பரிசோதகருக்குத் தெரியாததால, பள்ளிக்கூடப்பெடியள் தானே எண்டு அவங்களிட்ட கார்ட்டை குடுத்து, கண்ணை மறைச்சு, பார்வை எப்பிடி எண்டு சோதிச்சுப் பாக்கேக்க, அந்தப் பெடியள் சிலர் மொனிட்டரிட்ட கார்ட்டை வாங்கி நம்பர்களை ஒரு ஒற்றையில எழுதிட்டாங்கள். பிறகு அந்த நம்பரை வைச்சு, நாலைஞ்சு பெடிப்பிள்ளையள் ஒன்லைன் கேம் ஒண்டை காசு கட்டி விளையாடி இருக்கினம். அதாலதான் சுகாதாரப் பரிசோதகரின்ர காசு கார்ட்டில பறந்திருக்கு.

இதெல்லாம் தெரிஞ்சவுடன, திரும்ப அந்தப் பள்ளிக்கூடம் இருக்கிற ஏரியாவுக்குப் போய், அங்கையுள்ள பொலிஸ் ஸ்ரேசனில சுகாதாரப்பரிசோதகர் முறைப்பாடு குடுத்திருக்கிறார். ஆனால் பொலிஸ்காரர் இந்த விசயத்தில பெரிசா ஆர்வம் காட்டேலையாம். அடுத்தநாள் அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போய் கண்துடைப்புமாதிரி மேலால விசாரிச்சுப் போட்டு பேசாமல் இருந்திட்டினம். ஆனால் அந்தச் சுகாதாரப் பரிசோதகர் விடேலை. ஏனெண்டால் அவர் தன்ர பிள்ளையின்ர பிறந்தநாளுக்குச் சேர்த்துவைத்த காசு, இப்பிடிகண்ணுக்கு முன்னால பறந்திட்டுதே எண்ட கவலையில அதை எப்பிடியாவது மீட்டே ஆகிறது எண்ட முடிவில இருந்தார். மேலிடங்களுக்கு எல்லாம் அறிவிச்ச பிறகுதான் பொலிஸ்காரர் கொஞ்சம் இறங்கி வேலைசெய்யத் தொடங்கி இருக்கினம். அதோட அந்தச் சுகாதாரப் பரிசோதகர் தன்ர சொந்த யூரியூப்பில, இப்பிடி கார்ட் நம்பரை ஆட்டையைப் போட்டு கேம் விளையாட காசைக் கறந்த கதையைப் போட்டு, 'இதை எடுத்தவை தராட்டி பரவாயில்லை. சிவபெருமானில பாரத்தைப் போட்டுட்டன். அவர் எல்லாத்தையும் பார்த்துக்கொள்ளுவார்' எண்டு சொல்லியிருக்கிறார்.

இந்த யூரிப்பைப் பார்த்ததும், சுகாதாரப் பரிசோதகருக்கு மலேசியாவில இருந்து ஒரு கோல். 'அண்ணை, உங்கட வீடியோ பார்த்தனான். அந்த கார்ட் பாவிச்ச ஆக்களில என்ர தம்பியும் ஒராள்' எண்டு முழுவிவரத்தையும் சொல்லி அவையில சட்டநடவடிக்கை எடுங்கோ எண்டும் சொல்லியிருக்கிறார். அதுக்குப் பிறகு சுகாதாரப் பரிசோதகர் சம்பந்தப்பட்ட ஆக்களின்ர விவரத்தைப் பொலிஸில குடுக்க, அவையும் போய் அந்தப் பெடியளைப் பிடிச்சு, கேஸ் போட்டிட்டினம். கிளிநொச்சி கோர்ட்ஸில நடந்த இந்தக் கேஸில 'என்ன இருந்தாலும் இப்பிடி அக்கறையில்லாமல் கார்ட்டை பள்ளிக்கூடப் பெடியளிட்ட குடுத்ததும் பிழைதான்' எண்டு சொன்ன ஜட்ஜ், கார்ட் நம்பரை ஆட்டையைப் போட்ட பெடியளின்ர பெற்றோருக்கும் எல்லாருக்கும் முன்னால நல்லகிழி குடுத்திருக்கிறார். 'இப்பவே இப்பிடி கார்ட் நம்பரைக் களவெடுத்து காசடிக்கினம் எண்டால் பிற்காலத்தில என்னென்னவெல்லாம் செய்வாங்கள். உதுக்கு அந்தப் பெடியள் காரணமில்லை. நீங்கள் சரியா வளர்க்கேல்லை. அவங்கள் கார்ட் இல்லாமல் நம்பரை மட்டும் வைச்சுக்கொண்டு இப்பிடிக் காசை எடுக்கப் பாவிக்கிற மூளையைப் படிப்பில காட்டவையுங்கோ' எண்டு சொல்லி, அந்தச் சுகாதாரப் பரிசோதகரின்ர காசையும் கோர்ட்ஸ் வாங்கிக் குடுத்திட்டாம். இனிமேல் ஒருத்தரும் கார்ட் கையில இருந்தால்பயமில்லைஎண்டுநினைக்காதையுங்கோ. முக்கியமா அந்தக் கார்ட்டில இருக்கிற நம்பர்களை எக்காரணம் கொண்டும், அவசியமில்லாமல் ஆருக்கும் குடுக்கவும் வேண்டாம், காட்டவும் வேண்டாம். இல்லாட்டி அந்தச் சுகாதாரப் பரிசோதகர் மாதிரித்தான் அல்லாடோணும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன்வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** அனுகூலமான நாள். ஆனால்,புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என்பதால் உணவு விஷயத்தில் கவனம் தேவை. தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சகோதரவகையில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் மற்றவர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். முக்கியமான பிரமுகர்களின் அறிமுகமும் அவர்களால் ஆதாயமும் கிடைக்கும்.

**சிம்மம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள். இளைய சகோதர வகையில்செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம்.

**கன்னி:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்:** எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபடவேண்டிஇருக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். வாழ்க்கைத் துணையிடம் உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்வது ஆறுதலாக இருக்கும்.

**விருச்சிகம்:** பரபரப்பான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாகமுடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு இருப்பதுடன், எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** உற்சாகமான நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அவர்கள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். சகோதரர்களால் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பயணத்தால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழி உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும். தாயின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். ஆனால், புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது நல்லது. தாயின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

# கசூரினாக் கடற்கரையில் உள்ள கடற்படை முகாமை அகற்றுக

## பிரதேசசபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், ஜூலை 1**

**காரைநகர் கசூரினா கடற்படைமுகாம் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் என்று காரைநகர் பிரதேசசபையின் மாதாந்த அமர்வில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

காரைநகர் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் கிருஷ்ணன் கோவிந்தராசன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

அமர்வில் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் க.பாலசந்திரன், காரைநகர் கசூரினா கடற்கரை சுற்றுலாத்தலம் போன்று இல்லை. அங்குள்ள கடற்படைமுகாமுக்கு மாற்றுக்காணி, நட்டஈடு மற்றும் வீட்டு வசதிகள் அவர்களின் கோரிக்கைக்கு அமைவாக வழங்கப்பட்ட போதும், கடற்படையினர் இன்னமும் அங்கிருந்து விலகவில்லை. அச்சம் காரணமாக மக்கள் அங்கு செல்வதில்லை. சபையில் ஏற்கனவே உள்ள தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்றார்.

அதைத்தொடர்ந்து கசூரினாக் கடற்படை முகாமை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுப்பது என்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (எ-125)

# ஷானி நியமனத்துக்கு எதிராக கொந்தளிக்கின்றது பெரமுன!

கொழும்பு, ஜூலை 1

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர, குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளமை பாரதூரமான விடயமாகும் என்று ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். மொட்டுக் கட்சி தலைமையகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாட்டில் நடக்கக்கூடாத சம்பவமொன்று நடந்துள்ளது. பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. அலுவலகத்தில் ஊடக சந்திப்பை நடத்தி, அந்தக் கட்சியின் அரசியல் செயற்பாடுகளில் பங்கேற்ற ஷானி அபேசேகர குற்றப் புலனாய்வுப் பிரிவின் பிரதானியாக நியமிக்கப்பட்டுள்ளார். இது பாரதூரமான விடயமாகும். இதற்கு முன்னர் எந்தவொரு அரசாங்கமும் இப்படிச் செயற்பட்டதில்லை. தமக்குத் தேவையான விதத்தில் சட்டத்தைச் செயற்படுத்தவும், அரசியல் எதிராளிகளைப் பழிவாங்கும் நோக்கிலுமே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கட்சியாக இதனை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம் -என்றார். (எ-44)

# இளங்கலைஞர் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, ஜூலை1

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தால் வருடாவருடம் பிரதேச பண்பாட்டு விழாவில் வழங்கப்படும் கலைஞர்களுக்கான கலைசாகரம் மற்றும் இளங்கலைஞர் விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கலை, இலக்கியத்துறையில் பணியாற்றி வரும் 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு கலைச்சாகரம் விருதும் 18 முதல் 40 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு இளங்கலைஞர் விருதும் வழங்கப்படவுள்ளன. விருதுகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-9)

# மஹிந்த என்ற சிங்கம் புல்லைத் தின்னாதாம்

## சாகர காரியவசம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

மஹிந்த ராஜபக்ச என்பவர் சிங்கம். சிங்கம் ஒருபோதும் புல் தின்னாது. ஷிராந்தி ராஜபக்சவைக் கைதுசெய்ய வேண்டாம் என மஹிந்த கோரினார் எனக் கூறப்படுவது அப்பட்டமான பொய்யாகும் என்று ஸ்ரீலங்காப் பொதுஜனப் பெரமுனக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஷிராந்தி ராஜபக்சவை கைதுசெய்ய வேண்டாமென மஹிந்த ராஜபக்ச கோரிக்கை விடுத்தாரெ்ன வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது திட்டமிட்ட அடிப்படையில் பரப்பப்பட்ட வதந்தியாகும். தேர்தல் காலத்திதைப் போன்று தேசிய மக்கள் சக்தியால் திட்டமிட்ட அடிப்படையில் பரப்பப்பட்ட போலித் தகவலே இது. இதை முற்றாக நிராகரிக்கின்றோம்.

சிலவேளை போலிக் கடிதங்களைக் கூடத் தயாரித்திருக்கலாம். மகாநாயக்க தேரர்களிடம் மஹிந்த ராஜபக்ச இப்படியொரு கோரிக்கையை விடுக்கவே இல்லை என்று அவர் தெரிவித்தார். (எ-44)




# விளையாட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன. பிரதேச செயலகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டியில் பதக்கங்களின் அடிப்படையில் முதலாம் இடத்தைத் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும், இரண்டாம் இடத்தை நல்லூர்ப் பிரதேச செயலக அணியும், மூன்றாவது இடத்தை சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் பெற்றுக்கொண்டன.

மேலதிக மாவட்டச் செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் பா. முகுந்தனும் கலந்துகொண்டனர். (ச-41-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பகை, பொறாமை, கோபம் ஆகியவற்றை வெளிப்படுத்தினால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே வந்துசேரும்


– விவேகானந்தர் –

# ‘பூமராங்’ பாடங்கள்

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில், பக்கச்சார்பற்ற சர்வதேச விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று கோரியிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி. வழக்கமான அரசியல் சதிராட்டங்கள், ஏட்டிக்குப்போட்டியான கருத்துகளாக அல்லாமல், கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைப்பீடமான வத்திக்கானுக்கு நேரில் சென்று, கத்தோலிக்கத் தலைமைப்பீடங்களுடன் உரையாடிவிட்டு, அங்கு வைத்தே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குச் சர்வதேச விசாரணைகள் அவசியம் என்று ஐக்கிய மக்கள் சக்தி கோரியிருக்கின்றது.

இலங்கையை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த உலகையும் கிலிகொள்ளவைத்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு ஆறு ஆண்டுகள் முழுமைபெற்றுள்ளன. இயேசுக் கிறிஸ்துவின் மூன்றாம் நாள் உயிர்த்தெழுகைக்காக ஒன்றுகூடி இருந்தவர்கள் குருதிச்சகதிக்குள் புதைக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும், அவர்களுக்கான நீதி இன்னமும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது. சரியானவகையில், வெளிப்படையான மக்களாட்சி நடைபெறும் நாடென்றால், தாக்குதலின் பின்னணி தொடர்பான அத்தனை விடயங்களும் பகிரங்கப்படுத்தப்பட்டு மக்களின் உளக் காயங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டு பல மாதங்கள் கடந்திருக்கும். ஆனால், சபிக்கப்பட்ட இலங்கை அரசியலில் இவ்வாறான நடைமுறைகளெல்லாம் சாத்தியப்படாத சமாச்சாரங்களாக ஆகிவிட்ட நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னெடுப்பில் எந்தத் தவறுமில்லை. ஆனால், நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்ட உயிர்த்தஞாயிறுத் தாக்குதலுக்கு நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதற்காக இந்த விடயத்தில் சர்வதேச விசாரணையைக் கோரமுடிகின்றது என்றால், பல்லாயிரம் அப்பாவித் தமிழர்களின் படுகொலைக்காக ஈழத்தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையைக் கோருவதில் என்ன தவறு? உயிர்த்தஞாயிறுத் தாக்குதல்களுக்கு சர்வதேச விசாரணையைக் கோரியுள்ள இதே தரப்பினர்தான், இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு உள்ளகப் பொறிமுறை போதும் - சர்வதேச சாட்சியத் திரட்டல்கள் வேண்டாம் - சர்வதேச விசாரணைகள் வேண்டாம் - இலங்கை இறைமையுள்ள நாடு என்றெல்லாம் நீட்டி முழங்கிவருகின்றனர். எவ்வளவு பெரிய மாற்றாந்தாய் மனப்பாங்கு இது.

நீதி மறுக்கப்படுவது ஒருபுறம் இருக்கையில், நீதியைத் தேடித்தேடி நொந்து -நலிந்து போனவர்களை மேலும்மேலும் துன்பப்படுத்தும்வகையிலான கருத்துகளைத் தெரிவிப்பதில் கைதேர்ந்தவர்களாகத்தான் இலங்கையின் அரசியற்தலைவர்கள் செயற்படுகின்றனர். அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும் என்கின்றது சிலப்பதிகாரம். காலம் என்பது ‘பூமராங்’ போன்று விடுகைப்புள்ளியைத் திரும்பித் தாக்கும் வலுவான தன்மையுடையது. இது இலங்கையின் அரசியலில் ஏராளமான பாடங்களைக் கற்பித்திருக்கின்றது. ஆனால், எந்தவொரு அனுபவத்தையும் எமது தலைவர்கள்கற்றதாக இல்லை. எவ்வளவுதூரம் அவர்கள் நீதியைத் துச்சமெனக் கருதுகின்றார்களோ அவ்வளவுதூரம் பலமான எதிர்வினைகளை அனுபவித்தே தீருவார்கள். காலம் எனும் பொல்லாக் கிழவியின் தண்டிப்புகள் அவ்வளவு இலகுவானவையல்ல என்பதை அதிகாரத்தில் இருப்போர் உணர்வது நலம்.




இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு

## 5 மாதங்களில் மட்டும் 2,221 முறைப்பாடுகள்

கொழும்பு, ஜூலை 1

ஊழல், இலஞ்சம் தொடர்பாகக் கடந்த மே மாதம் வரையில் 2 ஆயிரத்து 221 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 224 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 44 முற்றுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முறைப்பாடுகளின் அடிப்படையில் இதுவரை 31 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 8 பொலிஸாரும், பாடசாலை அதிபர் ஒருவரும், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரும் அடங்குகின்றனர். 2024ஆம் ஆண்டு பதவியேற்ற நாள் முதல் பூரண சுதந்திரமும், எவரையும் கைதுசெய்வதற்கான அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. ஆணைக்குழு சுயாதீனமாகச் செயற்படுகின்றது என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் தலைவர் இடவெல தெரிவித்துள்ளார். (எ-6)



## கடவுச்சீட்டு அலுவலக வாயில் தரகர்களிடம் ஜாக்கிரதை

கொழும்பு, ஜூலை 1

கடவுச்சீட்டு அலுவலக வாசலில் தரகர்கள் செயற்படுகின்றனர் என்றும், அவர்களிடம் ஏமாறவேண்டாம் என்றும் குடிவரவு, குடியகல்வு அலுவலகம் எச்சரித்துள்ளது.

24 மணிச் சேவை நிறுத்தப்பட்ட பின்னர் காலை 6.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஒருநாள் சேவைக்கான விண்ணப்பங்கள் காலை 7 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்றும் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ-6)



## விசாக் காலத்தை நீடித்துள்ள இஸ்ரேல்

கொழும்பு, ஜூலை 1

இஸ்ரேலுக்குத் திரும்பிச் செல்வதற்கான விசா எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்று இஸ்ரேலிய சனத்தொகை மற்றும் குடிவரவு அதிகாரசபை தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என இஸ்ரேலிய சனத்தொகை மற்றும் குடிவரவு அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-6)

## கனவுத் தரிப்பிடத் திட்டம் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 1

கனவுத் தரிப்பிடத் திட்டம் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரயில் சேவையைத் திறம்பட நடத்துவதன் ஊடாக வீதி விபத்துகளைத் தடுப்பதுடன், வாகனப் புகையின் அளவைக் குறைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்துக்காக 100 ரயில் நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (எ-6)

## வழமைக்குத் திரும்பியது கொள்கலன் விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 1

கொழும்புத் துறைமுகத்தில் இறக்குமதிக் கொள்கலன்களை விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதம் தற்போது முழுமையாகத் தீர்க்கப்பட்டுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. துறைமுகத்துக்கு வரும் கொள்கலன்களின் எண்ணிக்கையின் சடுதியான அதிகரிப்புக் காரணமாகவே அவற்றை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டது என்று சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருங்கொட தெரிவித்துள்ளார்.

வழக்கமாக நாளொன்றுக்கு ஆயிரத்து 200 கொள்கலன்கள் கையாளப்படும். அண்மைய நாள்களில் அந்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 900 ஆக உயர்ந்ததாலேயே நெரிசல் உருவாகியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
புதன்கிழமை - ஆனி 18
02.07.2025
சுபநேரம் : 04.26- 05.56
ராகுகாலம் : 11.56-01 .26

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவைக் கையளிக்கும் பேச்சுக்கே இடமில்லை!

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூலை 1**

**இராஜதந்திர ரீதியிலும், சட்ட ரீதியிலும் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள கச்சதீவு எந்தக் காரணத்துக்காகவும் மீளக் கையளிக்கப்படாது என்று கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார். கடற்றொழில் அமைச்சில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்தியாவில் தேர்தல் அண்மிக்கும் போது தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் கைகளிலெடுக்கும் முதலாவது ஆயுதம் கச்சதீவாகும். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கரும் இந்தவிடயம் தொடர்பில் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். கச்சதீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது தவறு என்றும், அந்தச் சந்தர்ப்பத்தில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் காரணமாகவே இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுகின்றனர் என்றும் அவர் கூறியிருந்தார். தமிழ்நாட்டு அரசியல்வாதிகளின் சதித்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என ஜெய்ஷங்கரிடம் கேட்டுக்கொள்கின்றோம். தமிழ் நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் ஏற்படுத்தும் அழிவுகளால் எதிர்காலத்தில் பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ளநேரிடும். இந்திய மீனவர்களின் ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைளால் எமது மீன்வளம் மாத்திரமின்றி முழுக்கடல் வளமும் அழிந்துகொண்டிருக்கிறது என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சருக்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்த அழிவு தொடருமானால் இன்னும் 15 முதல் 20 ஆண்டுகளில் இலங்கையின் கடல் பாலைவனமாகும் அபாயத்தைத் தவிர்க்கமுடியாது - என்றார். (எ-இ)

# தேசிய மக்கள் சக்திக்கு புலிகளுடன் தொடர்பாம்

## ஹர்ஷனராஜகருணா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 1

தேசிய மக்கள் சக்திக்கும் புலம்பெயர் விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்புள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் கடந்த சனிக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குற்றஞ் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அவர்களுக்கிடையே தொடர்புள்ளதாலேயே இராணுவத்தினரை வீரர்கள் என்று அழைப்பதில்கூட பின்வாங்குகின்றனர். விடுதலைப்புலிகளுக்குச் சார்பாகவும் அவர்கள் பேசுகின்றனர். குறிப்பிட்டவொரு தமிழ் சமூகத்தை மகிழ்விக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பாக எதிர்க்கட்சியாக இருந்தபோது ஒரு நிலைப்பாட்டையும், ஆட்சிக்கு வந்தபின்னர் ஒரு நிலைப்பாட்டையும் பின்பற்றுகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் உள்ளோம். அரசாங்கம் அதை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்போகின்றது என்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம்.

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகள் எவற்றையும் நிறைவேற்றவில்லை. மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றது. கள்வர்கள் என்று விமர்சித்தவர்களுடன் இணைந்து உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைத்துள்ளனர்-என்றார். (எ-இ)



# பராட்டே சட்டத்தால் பாதிப்பு

## நாமல்

கொழும்பு, ஜூலை 1

பராட்டே சட்டத்தையும், வங்கிக் கடன்கள் மீள அறவிடலையும் செயற்படுத்தினால் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் முயற்சியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று பொது ஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் தொழில் நடவடிக்கைக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இந்த விடயத்தில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்க்கின்றோம்.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் தொடர்பாக அரசாங்கம் பொறுப்புடன் கவனம் செலுத்தாவிட்டால் ஏற்படும் தொழிற்றுறை வீழ்ச்சி பலரது வாழ்க்கையை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கும்-என்றார். (எ-இ)

# எம்.பி.க்களின் மனைவிகளுக்கு பாதுகாப்பு வழங்கமுடியாது

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மனைவிகள் கடைகளுக்குச் செல்வதற்கும், அவர்களின் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்குக் கூட்டிச்செல்வதற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது என்று பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பொலிஸ் பாதுகாப்புக் கோருவது தொடர்பாகக் கேட்டபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த காலங்களில் பொலிஸ் அதிகாரிகளைப் பயன்படுத்தியது அவர்களின் வீடுகளுக்கும், மனைவிகளைக் கடைகளுக்கு அழைத்துச்செல்வதற்கும், பிள்ளைகளை பாடசாலைகளுக்குக் கூட்டிச்செல்வதற்குமே. இந்தவிளையாட்டு எமது ஆட்சியில் நடக்காது. மக்களுக்குச் சேவை செய்வதே எமது தேவை. அதற்காகவே பொலிஸாரை நியமிப்போம். அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவில் இருந்து 2 ஆயிரத்து 800 பேரை நாம் பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பியுள்ளோம். அவ்வாறு செய்தும் பற்றாக்குறை உள்ளது. 5 ஆயிரம் பொலிஸாரைப் புதிதாக இணைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். எனக்குக்கூட பொலிஸ் பாதுகாப்பு இல்லை-என்றார். (எ-75)

# ஜனநாயகப் போர்வையை நீக்கியுள்ளது அரசாங்கம்

## அஜித் பி பெரேரா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 1

உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைக்கும் செயற்பாடுகளில் இந்த அரசாங்கத்தில் போர்த்தியுள்ள போர்வை நீக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தங்களை ஜனநாயகவாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் எவ்வாறு சர்வாதிகாரமாக ஆட்சியமைக்கின்றனர் என்பது இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொது நிதியைப் பயன்படுத்தி ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளைநல்லாட்சிஅரசாங்கமேமுன்னெடுத்தது. அதற்கான தீர்ப்புகளே தற்போது கிடைத்துக் கொண்டிருக்கின்றன. இதுவரை ஆரம்பிக்கப்படாதுள்ள விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று உரிய தரப்பினரிடம் கேட்டுக்கொள்கின்றோம்-என்றார். (எ-இ)

# மஹிந்த, கோத்தாவைப் போன்று செயற்படுகின்றது அரசாங்கம்!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு



தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கலாநிதி ஹர்ஷன சூரியபெரும நிதியமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளமை தவறான எடுத்துக்காட்டு. மஹிந்த மற்றும் கோத்தாபயவைப் போன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு அரசியல் நியமனங்களை வழங்கியுள்ளார் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் முன்னாள் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க. கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கலாநிதி ஹர்ஷன சூரியபெரும நிதியமைச்சின் செயலாளராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர் நிலைப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார். இவ்விரு செயற்பாடுகளும் மிக மோசமான எடுத்துக்காட்டாகும். அரச நிர்வாக சேவையிலும், இலங்கை மத்திய வங்கியிலும் இந்தப் பதவிக்கு தகுதியானவர்கள் எவரும் இல்லையா? ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்கவின் வசம், பாதுகாப்பு மற்றும் நிதிப் பொருளாதார அமைச்சுகள் உள்ளன. இந்த அமைச்சில் 94 நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் உள்ளன.

இந்த நிறுவனத்தின் செயற்பாடுகளை ஜனாதிபதியால் அமைச்சர் என்ற அடிப்படையில் கண்காணிக்கவோ அல்லது ஆராயவோமுடியாது.

ஆகவே பூரணத்துவமிக்கவகையில் நிதியமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் கோத்தாபய ராஜபக்சவின் ஆட்சியில் நிதியமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்கு அரசியல் நியமனங்களே வழங்கப்பட்டன. அதைத் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட மக்கள் விடுதலை முன்னணியினர் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் அவர்கள் இன்று அதையே செய்கிறார்கள்-என்றார். (எ-இ)

# ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

கொழும்பு, ஜூலை 1

இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் பாதுகாப்பாக விடுவிப்பதை உறுதிசெய்யவேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார். இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, அவர் எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 கடற்றொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே, தமிழக முதல்வர் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தலினை இரத்து செய்தல்

சபை நிதி 2025 (கட்டம் 5), முத்திரைத் தீர்வை நிதி, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சார்பாக 18.06.2025 ஆம் திகதி (புதன் கிழமை) இப் பத்திரிகையில் பிரசுரம் செய்யப்பட்ட மேற்படி கேள்வி அறிவித்தல் சபைத் தீர்மானத்தின் பிர்காரம் முழுமையாக இரத்து செய்யப்படுகிறது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

தி.பிரகாஷ்
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு
பிரதேச சபை, சுன்னாகம்

01.07.2025



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




இலங்கை நிர்வாக சேவை தரம் - III
(SLAS - III) இற்கு தெரிவாகி இன்றுமுதல்
(01.07.2025) நியமனம் பெறும் எமது
பாடசாலை ஆசிரியரான

**திருமதி. விதுஷா தினேஷ்**

அவர்களை பாராட்டி
வாழ்த்துவதோடு அவர்
மேலும் பதவி உயர்வு
பெற்று சேவையில் சிறந்து
விளங்க மனமார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஊழியர் நலன்புரிச் சங்கம்
கிளி/பூநகரி மத்திய கல்லூரி
பூநகரி

(CS 3515) E


# நாட்டைக் கொள்ளையடித்தால் மஹிந்த குடும்பத்துக்கும் சிறையே

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு


## காணி விற்பனைக்கு

கட்டுடை மானிப்பாய் கோவிற்பற்று
எழுமுள்ளி ஒழுங்கையில் 6 பரப்பு
வீடு கட்டுவதற்கு உகந்த காணி
விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 077 787 7843


கொழும்பு, ஜூலை 1

கடந்த காலங்களில் கொள்ளையடித்தமை விசாரணைகளின் மூலம் கண்டறியப்பட்டால் மஹிந்தவின் குடும்பமாக இருந்தாலும் சிறைக்கு அனுப்பப்படுவர் என்று பிரதமர் ஹறிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் விசாரணைகள் முறையாக இடம்பெறுகின்றன. குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். தராதரம் பார்க்கப்படமாட்டாது. மஹிந்தவின் குடும்பமாக இருந்தாலும் தண்டிக்கப்படுவர். அவர்களைத் தண்டிக்கக்கூடாது என்று சட்டத்தில் சொல்லப்படவில்லை. குற்றம் செய்திருந்தால் கொள்ளையடித்திருந்தால் சட்டம் அதன் கடமையைச் செய்யும் கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளால் அரச நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. நாம் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முன் இந்த வீழ்ச்சியை அறிந்திருந்தோம். ஆனால், இந்தளவுக்கு வீழ்ச்சி யடைந்துள்ளது என்று நாம் அறிந்திருக்கவில்லை. ஆட்சியைக் கைப்பற்றிய பின்தான் அந்த வீழ்ச்சியின் அளவைக் கண்டறிந்தோம். அது கடுமையான வீழ்ச்சி. எங்களுக்கு இரண்டு வேலைகள் உள்ளன. நாட்டையும் முன்னேற்ற வேண்டும், வீழ்ச்சியடைந்த நிறுவனங்களையும் சரிசெய்யவேண்டும். இரண்டையும் ஒன்றாகச் செய்துகொண்டுபோகின்றோம். இதனால்தான் முன்னேற்றத்தின் வேகத்தை உங்களால் அறியமுடியாமல் உள்ளது- என்றார். (ஏ-75)


## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11
07
1973



மறைவு
01
07
2015

**செல்லத்துரை நிதாசன் (பாபுஜி)**

காலம் நின்றது நீங்கள் சென்ற நாளிலே,
மனமோ ஏங்குகிறது ஒவ்வொரு நினைவிலே.
உங்கள் ஓசைகள் காற்றில் இரைந்திருக்க,
உங்கள் நடைகள் நெஞ்சில் பதிந்திருக்க.

விலகினீர்கள் உடலால் மட்டும் நீங்கள்,
உணர்வால் எப்போதும் எம்மோடுதான் நீங்கள்.
முடிவல்ல இது... ஒரு மாற்றமே,
நம் வாழ்வில் நீங்கள் என்றும் ஒளியே!

நிரந்தர முகவரி
திருவடி நிழல்
ஊரெழு மேற்கு
சுன்னாகம்

தற்காலிக முகவரி
இல 102 அண்ணா வீதி
ஆனந்தபுரம்
கிளிநொச்சி

(CR 45398) E



## பத்தாவது ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
08
03
1954



விண்ணில்
22
06
2015

**அமரர் சின்னத்துரை ஸ்ரீகந்தராஜா**

(ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்)

ஈரைந்து ஆண்டுகளோடியும் - எம்
மனமாறாத்துயரோடும் உம் நினைவோடும்
விழி நீரோடும் வழி நடந்து செல்கிறோம்...
என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர்கள்
என எண்ணிலாக் கனவுகள் கண்டிருந்தோம்!
எம் இதயங்களில் என்றும் நீங்கள் குடியிருப்பீர்கள்!
எம் வாழ்வுள்ளவரை நிழலால் நீங்கள் தொடர்வீர்கள்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்...

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS 58726) E



## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21
07
1955



மறைவு
24
06
2023

**திருமதி கணேசமூர்த்தி இராசலட்சுமி**

பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் திருவுருவாய் மலர்ந்த
எம் அருமை அன்னையே!
அணையாத சுடராய் எல்லோர்
மனதிலும் இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்
விண்ணில் இருந்தாலும்
எமக்கு ஒளி விளக்காய் ஒளி தந்து
வழிநடத்துவீர் அன்னையே!
உங்கள் ஆன்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அரசடி
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
கணவர்

(CS 3514) E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தில் உயர்பதவிகளில் செம்மணிப் படுகொலையாளிகள்

## மக்கள் போராட்ட முன்னணி சுட்டிக்காட்டு

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலைக் குற்றவாளி சோமரத்ன ராஜபக்ச தனது வாக்குமூலத்தில் செம் மணிப் படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் எனக் குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகளில் பலர் இன்னமும் உயர்பதவிகளை வகிக்கின்றனர். இவர் களுக்கு எதிராக உடன் விசாரணைகள் ஆரம்பிக்கப் படவேண்டும் என்று மக்கள் போராட்ட முன்னணி வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பில் மக்கள் போராட்ட முன்னணியின் உறுப்பி னர் ராஜ்குமார் ரஜீவ்காந் தெரிவிக்கையில், இலங்கையில் இன்று பேசுபொருளாக இருக்கின்ற விடயம் செம்மணிப் படு கொலைகள் மற்றும் அதன் அகழ்வுப் பணிகள்.1996 ஆம் ஆண்டு கிருஷாந்தி குமார சுவாமி என்கின்ற மாணவி பாலியல்வன்கொடுமைக்கு உள்ளாக்கப் பட்டுக் கொலைசெய்யப்பட்ட வழக்கில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட சோம ரத்ன ராஜபக்ச நேரடியாகச் சாட்சியம் வழங்கினார். அதனடிப்படையில் கைது செய்யப்பட்டவர்களின் உயரதிகாரிகள் தொடர்பில் எந்த விசாரணையும் இடம் பெறவில்லை. அன்று அங்கு கடமையில் இருந்த வர்கள் எல்லாம் இன்றும் இராணுவத்தில் இருக்கின் றார்கள். சிலர் இராணுவத்தின் பெரிய பதவிகளைப் பெற்றிருக்கின்றார்கள். எனவே இவற்றுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்கள் மேல் உடனடியாகத் தீவிரமான விசாரணை யொன்றை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்- என்றார். (ச-இ)

**வீடு வாடகைக்கு தேவை**

நல்லூர், கச்சேரி, அரியாலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: **077 291 9079**

**வேலையாட்கள் தேவை**

அச்சுவேலியில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள், சாரதி தேவை.

உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **077 777 5068**

## INVITATION FOR BID 2025/08
## VALIKAMAM EAST PRADESHIYA SABHA
## NORTHERN PROVINCE

1. The Chairman, Divisional Procurement Committee, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via PSDG
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Docuement
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from 2025-07-01 To 2025-07-15 during 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur (T. P:021-205-8865, e-mail: pmdveps @ gmail. Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at Conference Hall, Valikamam East Pradeshiya Sabha, Puttur as stated in table below.
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2025-07-01 To 2025-07-15 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-07-08 |
| | Closing and Opening of Bids | At 2.00 P.M on 2025-07-16 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2025/ LAR/02 | Renovation of kalaimani Veethy, Irupalai Stage I | 2.54 | 63 | C9 or above (Highway) | 2,500.00 | 26,000.00 | 01.10.2025 | 49 |
| PSDG/NP/JAF/VEPS/2025/ LAR/03 | Renovation of kalaimani Veethy, Irupalai Stage II | 3.37 | 63 | C9 or above (Highway) | 2,500.00 | 34,000.00 | 01.10.2025 | 49 |

Chairman
Divisional Procurement Committee,
Valikamam East Pradeshiya Sabha,
Puttur.

01.07.2025

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 10 . 06 . 1943



மறைவு 27 . 06 . 2025

### சுப்பையா கதிரவேரு (சாமியார்)

வேலனை மேற்கு வேலனை 08 ஆம் வட்டாரத்ததை பிறப்பிடமாகவும் திருமுறிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கதிரவேலு (சாமியார்) அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முடிப் பிள்ளையாரை வேண்டி நிற்கின்றோம்.

வேலனை மேற்கு
வேலனை - 08

சகோதரி திருமதி
இராசலெட்சுமி
நாகரெத்தினம்
குடும்பத்தினர்.

## மணப்பெண் தேவை

- காரைநகர்-பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1988. புனர்பூசம். MSc, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- காரைநகர். இந்து. கௌரவகுலம் (V), 1990, ஆயில்யம். Computer Science, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை (28386)
- புங்குடுதீவு. இந்து. கௌரவகுலம் (V). 1989. சுவாதி. Engineer Canada citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (32178)
- காரைநகர். இந்து. கௌரவகுலம் (V). 1992. பூரட்டாதி. Civil Engineer, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை (32827)
- நெல்லியடி. இந்து. கௌரவகுலம் (V). 1991. பூராடம் Graduated, USA citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (47452)
- கொக்குவில்-இணுவில். கௌரவகுலம் (V), 1988, திருவோணம் Civil Engineer Australia citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (52796)
- அளவெட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1989. உத்திராடம். Msc in Engineer, UK citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (53552)
- திருநெல்வேலி-சாவகச்சேரி. இந்து. கௌரவகுலம் (V). 1992. கார்த்திகை. Bsc (Hons) in IT, UK citlzen, மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
- கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. அர்த்தம்.Graduated. UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (38579)
- Jaffna Town, இந்து. கௌரவகுலம் (V). 1991. கார்த்திகை. Masters of Accounting and Finance, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (43419)

எம்மிடம் எல்லா நாட்டிலும் Unmarried, Divorce, மணப்பெண்களும். மாப்பிள்ளைகளும் உண்டு.

www. thaalee.com
S.Sharma J.P

Phone & Whatsapp
**077 539 3728**

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 02 . 1942



இறப்பு 30 . 06 . 2025

### இராசதுரை வள்ளிநாயகி

மயிலிட்டியை பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை வள்ளிநாயகி அவர்கள் நேற்று (30.06.2025) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-மூத்தநாச்சன் தம்பதினரின் அன்பு மகளும் விக்கினேஸ்ரன், புஸ்பறோகினி, இரஞ்சிதமலர்(கனடா), சிவனேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்பநிதி, பாலகிருஸ்ணன், காலஞ்சென்ற இராசசேகரம் ஆகியோரின் மாமியாரும் யசோதரன்(ஆசிரியர் யா/மண்டைதீவு றோ.க வித்தியாலயம்), கேசவன் (சவுதி அரேபியா), சரண்யா, புவிராஜ் (டுபாய்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆதிரனின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2025) செவ்வாய்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 963 8229

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 03 . 1951



மறைவு 30 . 06 . 2025

## செல்வி. கனகநாயகி ஆறுமுகம் (மணி)

**(பண்டிதர், பழைய மாணவி யாழ்ப்பாணக் கல்லூரி)**

மூளாய் டச்சு வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி கனகநாயகி ஆறுமுகம் (மணி) அவர்கள் நேற்று (30.06.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - பரஞ்சோதி தம்பதியினரின் புதல்வியும், ஏகாம்பரநாதனின் (அப்பர் மூளாய் கூட்டுறவு வைத்திய சாலை), அன்பு சகோதரியும், சிவசக்தியின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற தவபாக்கிநாதன், நடராசா, ஆகியோரின் பெறாமகளும், காலஞ்சென்ற உத்தமிதேவி, சச்சிதானந்தன் - அருந்ததிதேவி மற்றும் தங்கதேவி ஆகியோரின் மருமகளும், திலகவதியார் (மலர்), பத்மநாதன், பங்கயச்செல்வி (வட்டு இந்துக்கல்லூரி) ஆகியோரின் சகோதரியும், வெற்றிவேல் நாதன் (மாயன்), சண்முகநாதன் (இந்தி கனடா), செல்வகுமாரி (ராணி), கோவிந்தராஜன் (கோபு), காலஞ்சென்ற யசோதா, சாரதா மற்றும் கோமளா (யாழ்ப்பாணக் கல்லூரி), மகாலட்சுமி (பிரான்ஸ்), சிந்துஜா, ஜெயலட்சுமி (பிரதேச செயலகம் நுவரெலியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.07.2025) இன்று செவ்வாய்க்கிழமை காலை 10:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
மூளாய்.

தகவல் :
குடும்பத்தினர்
077 748 7976

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 01 . 1950



மறைவு 30 . 06 . 2025

## திருமதி. கந்தையா பேபிகமலா

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. கந்தையா பேபிகமலா அவர்கள் நேற்று (30.06.2025) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியின் மூத்த மகளும், காலஞ்சென்ற முருகேசு - அமுது தம்பதியின் மருமகளும், முருகேசு கந்தையா அவர்களின் பாசமிகு மனைவியும், நாகேஸ்வரி, ரேவதி ஆகியோரின் சகோதரியும், கனகரத்தினம், உருத்திரசிங்கம், ஆகியோரின் மைத்துனியும், அமிர்தரஞ்சினி (ஆசிரியை மகாஜனா கல்லூரி), ஜெயந்தினி, சுபாஜினி (பிரதேச செயலாளர் சண்டிலிப்பாய்), குமுதினி (பிரதேச செயலகம் தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருநாவுக்கரசு, ஜெயபாலசிங்கம், மதியழகன் (ஆசிரியர் ஸ்ராலின் கல்லூரி யாழ்ப்பாணம்), தனேஸ்வரன் (பிரதேச செயலகம் தெல்லிப்பளை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுடர்மயன், சுதாங்கன், ஆனந்தி, தர்சனசாயி ஆகியோரின் பேர்த்தியும், நாகதர்ஷினி, யதுசாயினி, ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.07.2025) செவ்வாய்க்கிழமை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தச்சன்காடு இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 634 1360

தகவல் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி கனகலிங்கம் சரோசாதேவி

**(நவாலி வடக்கு, மானிப்பாய்)**



நவாலி வடக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் சரோசாதேவி அவர்கள் கடந்த (28.06.2025) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராசா-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ரவீந்திரன் (ஜேர்மனி), அகிலேந்திரன் (சுவிஸ்), சந்திராதேவி, பாலேந்திரன் (கனடா), தனேந்திரன் (கொமர்ஷல் கிரெடிட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காஞ்சனாதேவி (ஜேர்மனி), கஜனி (சுவிஸ்), திருவிளங்கம் (ஆசிரியர்), கார்த்திகா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மல்லிகாதேவி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி செல்வரட்ணம், பேரின்பநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரோஜினிதேவி, காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பராசக்தி, சிவயோகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் பிரவிகா, அபிசகா, அறிவகன் (ஜேர்மனி), அரங்கன், அபர்ணன், அபூர்ணா (சுவிஸ்), கோபினி, தாரணி, திருவரசன் (நவாலி), லயா, சாய்லக்ஸ்மி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.07.2025) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரயம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தோற்றம் 15.05.1945 மறைவு 28.06.2025

தகவல்:
குடும்பத்தினர்
077 711 0513

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் நிகழ்ச்சித் திட்டத்துக்கமைய தென்மராட்சிப் பிரதேச செயலகப்பிரிவில் கோயிற்குடியிருப்புக் கிராமத்தில் பெண்களுக்கான ஆடைவடிவமைப்புப் பயிற்சிநெறி இடம்பெற்றது. (எ-25,9)




# பெண் வேட்பாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சிசபைகளில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பெண்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற 15 பெண்கள் கௌரவிக்கப்பட்டனர். நிகழ்வில் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் தனுஜா முருகேசன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன், யாழ்.மாநகரசபை முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா, வெற்றிபெற்ற உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-20-66)




# கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

சுழிபுரம் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வு கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் தேசிய மட்டத்தில் வேக நடைப்போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்ற மாணவி ஜீ. தமிழரசி கௌரவிக்கப்பட்டார். கழகத்தின் தலைவராகச் செயற்பட்ட, வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளராகத் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள ச.ஜெயந்தனும் கௌரவிக்கப்பட்டார். (எ-25,125)





சாவகச்சேரிநகர் அருள்மிகு அமிர்தபாஷினி சமேத சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நேற்று திங்கட்கிழமை சப்பறத் திருவிழாவும் நாளை செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை புதன்கிழமை தீர்த்தோற்சவமும் நாளைமறுதினம் வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை வைரவர் மடையும் இடம்பெறவுள்ளன. (ச-22.159)



# பதவியேற்பு

முல்லைத்தீவு, ஜூலை 1

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசசபைக்குத் தெரிவான உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கள்ளப்பாடு பகுதியில் இடம்பெற்றது. இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான துரைராசா ரவிகரன் முன்னிலையில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபைக்குத் தெரிவான இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஏழுபேரும் சத்தியப்பிரமாணம் மேற்கொண்டனர். (ச-22)



# இலத்திரனியல் கழிவுகள் சேகரிப்புவாரம் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை 1

மின் மற்றும் இலத்திரனியல் கழிவு சேகரிப்புவாரம் அண்மையில் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ்.முரளிதரனால் குறித்த நிகழ்வு ஆரம்பித்துவைக்கப்பட்டது. (ச-41-113,27)




# நிர்வாகத்தெரிவும் மரநடுகையும்

யாழ்ப்பாணம், ஜூலை 1

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் புதிய நிர்வாகத்தெரிவு சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையத்தில் அண்மையில் நடைபெற்றது.

தலைவராக ச. பிரசாந்தும், செயலாளராக கோ.பவியாவும், பொருளாளராக கு.சுலக்சனாவும், உபதலைவராக சொ. திவாகரும், உபசெயலாளராக ஜீ.சிந்துஷாவும் தெரிவுசெய்யப்பட்டனர். தொடர்ந்து மரநடுகையும் இடம்பெற்றது. (எ-25,125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்னாள் அமைச்சர் லொகுகே காலமானார்

கொழும்பு, ஜூலை 1

முன்னாள் அமைச்சர் காமினி லொகுகே (வயது- 82) நேற்று மாலை காலமானார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும், முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான அவரின் மறைவை அவருடைய குடும்ப உறுப்பினர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ-ம-இ)

## செயற்கை...

செம்மணிப் புதைகுழியில் சமீப நாள்களாக பல்வேறு மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்டு வருகின்றன. கடந்த இரு நாள்களாக மனிதச் சிதிலங்களுக்கு மேலதிகமாக புத்தகப்பை, வளையல்கள், பாதணிகள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றை அடிப்படையாக வைத்து செயற்கை நுண்ணறிவின் உதவுடன் போலியானதும் கற்பனையானதுமான படங்களை இணையப் பயனர்கள் உருவாக்குவதுடன் அவற்றை சமூக வலைத்தளங்களில் பரவவும் விட்டுள்ளனர்.

இந்தச் செயற்பாடுகள் குற்றவியல் விசாரணைகளை சீர்குலைக்கின்றன. அத்துடன், விசாரணைகளின் நோக்கங்களில் அல்லது செல்நெறிகளில் வலிந்து தலையீட்டையும், திசைதிருப்பலையும் ஏற்படுத்தும் முயற்சியாகப் பார்க்கப்படுகின்றது. இதையடுத்தே, இவ்வாறான ஒளிப்படங்களைப் பகிர்வோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், செயற்கை நுண்ணறிவுப் படங்களால் உண்மையாகப் பாதிக்கப்பட்டவரின் உரு அடையாளங்கள் மாற்றப்படும் ஆபத்து இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. செயற்கை நுண்ணறிவு ஒளிப்படங்களின் உண்மையை ஆராயாமல் அவற்றை உண்மையென நம்பி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேற்று உரையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## மாவிட்டபுரம்...

காலை, மாலை உற்சவங்களாக இந்த மஹோற்சவப் பெருந் திருவிழா இடம்பெறவுள்ளது. இந்த மஹோற்சவப் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை இரவு 8 மணியளவில் திருமஞ்சத் திருவிழாவும், 14ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 8 மணியளவில் கைலாசவாகனத் திருவிழாவும், 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணி தொடக்கம் முற்பகல் 11.30 மணிவரை திருக்கார்த்திகைத் திருவிழாவும், 21ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் வேட்டைத் திருவிழாவும், 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் பெரிய சப்பரத் திருவிழாவும், 23ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் பஞ்சரத பவனியும், 24ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை கண்டகி தீர்த்தக் கடலில் தீர்த்தோற்சவமும், அன்றைய தினம் இரவு 8.30 மணியளவில் கொடியிறக்கத் திருவிழாவும் நடைபெறுமென ஆலயப் பிரதம குருவும், ஆதீன கர்த்தாவுமான மகாராஜ ஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்தார். (அ-ம-66)

## இந்தியப்...

தொடர்பில் ஓரிரு நாள்களுக்குள் முடிவெடுக்கப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உலக வங்கியின் அலுவலர்களுடனான சந்திப்பின் பின்னர், ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

தடைக்காலம் முடிவடைந்து இந்திய மீனவர்கள் மீண்டும் அத்துமீறி வருகின்றனர். இவ்வாறு அத்துமீறிய சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர். எமது கடலெல்லைகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாங்கள் மேற்கொண்டுள்ளோம். இந்திய மீனவர்கள் அத்துமீறினால் அவர்களைக் கைது செய்வது என்பதில் உறுதியாகவுள்ளோம். எனவே, தயவு செய்து எமது கடற்பரப்புக்குள் வரவேண்டாம் என இந்திய மீனவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்கிவிட்டு, கடல்வளங்களை அழித்துவிட்டு எம்மை தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறுவதில் பயனில்லை என மீண்டும் மீண்டும் கூறிவருகின்றோம். இந்திய மீனவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட 124 இந்திய இழுவைப்படகுகள் மயிலிட்டியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பில் இன்னும் ஓரிரு நாள்களில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

மயிலிட்டியில் உள்ள இந்திய இழுவைப் படகுகளை, அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்கும் நோக்கில் இந்திய கடலெல்லையில் மூழ்கடிப்பது என்று ஏற்கனவே முடிவெடுக்கப்பட்டிருந்தது. படகில் காணப்படும் கடல் வளத்துக்கு ஒவ்வாத பொருள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் கடந்த சில நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## 79 கிலோ...

மீட்கப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட பெண்ணிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவரை நீதிமன்றில் முற்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-113)

## பூநகரியில்...

பரவியுள்ளது. இதில் மோட்டார்சைக்கிளில் பயணித்தவர்களும், ஹைஏஸ் வாகனத்தில் பயணித்தவர்களுமாக ஐந்து பேர் காயமடைந்த நிலையில், அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பூநகரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-113)

## நெடுந்தீவு...

ளார். நெடுந்தீவு பிரதேசசபையின் முதலாவது அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு முன்னிலையில் நெடுந்தீவு பிரதேசசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. 13 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபையில் தமிழரசுக் கட்சி 6 உறுப்பினர்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 4 உறுப்பினர்களையும், தேசிய மக்கள் சக்தி 2 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் உறுப்பினரையும் பெற்றுள்ளன.

தவிசாளராக தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சங்கரப்பிள்ளை சத்தியவரதன் முன்மொழியப்பட்டார். வேறு எவருடைய பெயரும் பிரேரிக்கப்படாத நிலையில், சங்கரப்பிள்ளை சத்தியவரதன் ஏகமனதாகத் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் முன்மொழியப்பட்ட செபஸ்ரியன் விமலதாஸ் தெரிவானார். (அ-ம-125-26)

## நீராடச்...

நேற்றுமுன்தினம் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கனகராயன்குளம் புதுவிழாங்குளம் பகுதியைச் சேர்ந்த சண்முகராஜா சத்தியகிரி என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். இவர் வவுனியா வடக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## வாகனத்தில்...

பிரிவினருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த மூவரும், குருநாகல் பகுதியைச் சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ-ம-19)

## அவதானிக்கப்பட்ட...

இருந்த மனிதச் சிதிலங்களை மீட்கும் பணிகள் நேற்றுத் துரிதப்படுத்தப்பட்டன. யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான இரண்டாம்கட்ட அகழ்வுப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை 33 மனிதச் சிதிலங்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவற்றை முற்றாக அகழ்ந்தெடுக்கும் நடவடிக்கைகள் நேற்று இடம்பெற்றன.

நேற்றுமுன்தினம் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட நீல நிற புத்தகப்பையொன்றும், என்புத் தொகுதியொன்றும் அடையாளம் காணப்பட்ட நிலையில், அதற்குக் கீழே பாதணியொன்று நேற்று அவதானிக்கப்பட்டுள்ளது. குறித்த என்புத் தொகுதியைச் சூழ ஆடைகள், கண்ணாடி வளையல்கள் என்பனவும் முன்னதாக அடையாளம் காணப்பட்டிருந்தன.

நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜாவின் கண்காணிப்பில், துறைசார் நிபுணரும் பேராசிரியருமான சோமதேவாவின் தலைமையில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பான சட்டத்தரணி ஞா.ரணித்தா, சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும் அகழ்வுப் பணிகளின்போது முன்னிலையாகி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## செம்மணிப்...

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செம்மணிப் புதைகுழிப் பிரச்சினை என்பது மிக முக்கியமான பிரச்சினை. கிருசாந்தியின் கொலை என்பது பல வருடங்களாக வழக்கு நடைபெற்று வந்த விடயம். இவற்றுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாகவுள்ளோம். செம்மணிப் புதைகுழியில் நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகளும் மனிதச் சிதிலங்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவற்றின் பின்னாலுள்ள வலி பெரியது. ஆனால், இந்த விடயத்தில் நீதிகோரி இடம்பெறும் மக்கள் போராட்டத்தை நலினப்படுத்தும் முயற்சியில் சிலர் ஈடுபட்டு வருகின்றனமை கவலைக்குரியது.

செம்மணியில் போராட்டம் இடம்பெற்றபோது நானும் அங்கு சென்றிருந்தேன். அங்கு பத்து முதல் பதினைந்து வரையானவர்கள் எமக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினார்கள். நான் முதலில் சென்று அந்த மக்களை சந்தித்தேன். அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது அங்கு திட்டமிட்டு ஏவப்பட்ட கும்பலாலேயே குழப்பம் ஏற்பட்டது.

நிச்சயமாக அங்கிருக்கும் மக்கள் மீது எவ்விதமான குற்றச்சாட்டுக்களையும் முன்வைக்கவில்லை. மக்கள் அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபடவுமில்லை. மக்களின் போராட்டத்தில் ஓர் அமைச்சர் கலந்துகொண்டால் அது மிகவும் கனதிமிக்கதாக அமையும். இதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். ஆனால், அத்தகைய அங்கீகாரத்தைக் குழிதோண்டி புதைக்கின்ற வகையில் அரசியல் சாக்கடையில் இருக்கின்ற ஒருசில அரசியல்வாதிகள் செயற்பட்டுள்ளனர் - என்றார். (அ-ம-26)

## எகிறியது...

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தனது மாதாந்திர விலைத் திருத்தத்தை நேற்று இரவு வெளியிட்டுள்ளது. இதன்படி, ஒக்ரேன் 92 பெற்றோல் லீற்றருக்கு 12 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி லீற்றர் ஒன்றின் புதிய விலை 305 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

டீசல் லீற்றர் ஒன்றின் விலை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, லீற்றர் ஒன்றின் புதிய விலை 289 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விலையும் லீற்றர் ஒன்றுக்கு 7 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு, புதிய விலை லிற்றருக்கு 185 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேகக் கட்டுப்பாடின்றி கப்ரக வாகனம் விபத்து

திருகோணமலை, ஜூலை 1

திருகோணமலை ஹொரவ்பொத்தானைப் பிரதான வீதி வெல்வேரிப் பகுதியில் கப்ரக வாகனம் நேற்றுமுன்தினம் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

வவுனியாவில் இருந்து மூதூர் நோக்கிப் பயணித்த லொறியே பாதையை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியதில் விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் சாரதி காயமடைந்தநிலையில் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பிலான விசாரணைகளை மொரவெவப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-இ)

# மனச்சாட்சியின் கதவைத் திறந்தது 'அணையாவிளக்கு' போராட்டம்

## போராட்ட ஏற்பாட்டுக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

**சர்வதேச நாடுகளை உள்ளடக்கிய அமைப்பொன்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் முக்கியமான பதவியிலிருக்கும் தனிநபர் ஒருவரின் மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டியுள்ளமை அணையாவிளக்குப் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி. நீண்ட பயணத்துக்கான முதலடியை மக்கள் தன்னெழுச்சியாக எடுத்துவைத்துள்ளனர் என்று அணையாவிளக்குப் போராட்டத்தை ஏற்பாடுசெய்த மக்கள் செயல் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.**

இதுதொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

செம்மணி மனிதப் புதைகுழிக்குச் சர்வதேச நீதி வேண்டியும், தமிழ்ச் சமூகத்தினிடையே விழிப்பை ஏற்படுத்தும் முகமாகவும் மக்கள் செயல் தன்னார்வ அமைப்பினரால் ஏற்பாடுசெய்யப்பட்டு கடந்த 23,24, 25 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட அணையாவிளக்குப் போராட்டம் எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிக தாக்கம் செலுத்தியுள்ளது. இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திமுடிப்பதற்கு எம்மோடு துணைநின்றவர்கள் அனைவருக்கும் நன்றிகள். தமிழர் தாயகத்தில் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் விடயத்திலும் சர்வதேசத்தின் கவனத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்கும் முகமாக நிகழ்த்தப்பட்ட இப்போராட்டத்தின் இறுதி நாளில் முகம்சுழிக்கவைக்கும் சில துர்நிகழ்வுகள் இடம்பெற்றுவிட்டன. இதற்குப் பொதுமக்களிடமும், அரசியற் பிரமுகர்களிடமும் எமது உளப்பூர்வமான வருத்தங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அணையாவிளக்கென்பது வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயத்திலும், செம்மணி மனிதப் புதைகுழி விடயத்திலும் சூழ்ந்திருக்கின்ற இருளை நீக்கவேண்டிய அவசியத்தை உலகறியச் செய்திருக்கின்றது. உலகின் மொத்த மனச்சாட்சியையும் தட்டிப்பார்த்தோம். பல தலைமுறைகள் கடந்தாவது நாம் கோரும் நீதியின் கதவுகள் திறக்கும் என நம்புகின்றோம் - என்றுள்ளது. (ச-66)

### வலிகாமம் மேற்கில்

# வீதி விளக்குகளுக்காக ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 1

வலி. மேற்குப் பிரதேசத்தில் வீதி விளக்குகளைப் புதிதாக இணைப்பதற்கு 15 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று பிரதேசசபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜெயந்தன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு அண்மையில் இடம்பெற்றபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்விளக்குகள் மற்றும் வீதி விளக்குகளைப் புனர்நிர்மாணம் செய்யும் முகமாக 15 இலட்சம் ரூபா சபையால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களுடைய வீதி விளக்குக்கோரிக்கைகளை சபையிடம் சமர்ப்பிக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-125)

# பிணிதீர்க்கச் சென்றவர் உயிரிழப்பு: உடற்கூறு மாதிரிகள் கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 1

பிணி தீர்ப்பதற்காக ஆலயமொன்றுக்கு சென்ற குடும்பத்தலைவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்த நிலையில், அவரின் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வலிகாமம் கிழக்கு மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்ட விசாரணையின்போது அவருக்கு சில மாதங்களின் முன்னர் நாயொன்று கடித்ததாகத் தெரியவந்துள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனையில் மரணத்துக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த நபரின் இறப்புக்குக் காரணமான நாய் மேலும் சிலருக்கும் கடித்ததாகக் கூறப்படும் நிலையில், அவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-26-27-100)

**வேலையாட்கள் தேவை**

K.K.S வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு சமையலறை உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்பு: 077 991 2628

(CS 56730) E

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**வேலையாட்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள புடவையகத்திற்கு வேலை தெரிந்த, பழக விரும்பும் பெண் வேலையாள் தேவை. (சுன்னாகத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- 076 632 3554



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அலகின் நான்கு சமுர்த்தி வங்கிகளுக்கும் உட்பட்ட பிரதேசங்களில் மரநடுகை நிகழ்வும் சிரமதானப் பணியும் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. (ச-9)

டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்வு அச்சுவேலி மத்திய கல்லூரி சமூகத்தால் கடந்த வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. மாணவர்கள், ஆசிரியர்கள், பிற ஊழியர்கள் ஆகியோர் இணைந்து பாடசாலை வளாகத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் துப்புரவுசெய்தனர். (எ-41)





**பணியாளர் வெற்றிடம் யாழ்ப்பாணம்**

- Receptionist (பெண்) (ஆங்கிலம், சிங்களம், கணனி அறிவு தேர்ச்சி உள்ளவர்கள்)
- தொழிநுட்ப உத்தியோகத்தர் (Technical Officer)
- களஞ்சியக் காப்பாளர் (பெண்)
- வெல்டர் (welders)
- காப்பென்டர் (Carpenter)
- MDF, Shutter Board வேலை தெரிந்தவர்கள்
- தொழிற்சாலை பகுதிநேர உதவி வேலையாட்கள் (ஆண்/பெண்)
- சாரதி (AD சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும்)

அனுபவமுள்ளவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்பு சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்

இணையவிரும்புபவர்கள் அலுவலகத்திற்கு நேரில் வரவும்

021 224 0110
077 287 2519

EUT
புன்னாலைக்கட்டுவன் தெற்கு, யாழ்ப்பாணம்

(CR 45399) E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வடக்கில் படைமுகாம்களை அகற்றுவது ஆபத்தானதாம்


## சரத் பொன்சேகா கூறுகின்றார்

**கொழும்பு, ஜூலை 1**

**சிங்கப்பூர் மற்றும் சுவிட்ஸர்லாந்தில் இருக்கும் நிலை இங்கில்லை. அதனால் வடக்கில் படைமுகாம் அகற்றல் மற்றும் காணி விடுவிப்பின்போது பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாதவகையிலேயே முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின்போது வடக்கு, கிழக்கு காணி விடுவிப்பு சம்பந்தமாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு, கிழக்கில் புலிகளின் மனோநிலையில் வாழும் சிலரும் இருக்கவே செய்கின்றனர். புலிகளின் நிகழ்ச்சிநிரல் தொடர்பாகக் கனவு காணும் தரப்பினரும் உள்ளனர். அனைத்து மக்களும் அல்லர். 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரையானோர் அவ்வாறு இருக்கலாம். அதேபோல புலிகளை ஆசீர்வதித்த அரசியல்வாதிகள் உள்ளனர். புலிகளை மீள் எழுச்சிபெற வைப்பதற்கு முற்படும் டயஸ்போராக் குழுவொன்றும் உள்ளது. இப்படியான அச்சுறுத்தல் இருப்பதால், போர் மூண்ட பிறகு முகாம்கள் அமைப்பது பற்றிச் சிந்திக்காமல், தூரநோக்குச் சிந்தனை அடிப்படையிலேயே முடிவுகள் எடுக்கப்படும். பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாதவகையில் முகாம்கள் இருக்கவேண்டும். அதற்காகப் போர்க்காலத்தில் இருந்தது போல் அல்ல. பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படாதவகையில் நகர்வுகள் இடம்பெறவேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்பைப் பலவீனப் படுத்தினால் அங்குள்ள மக்களுக்குத்தான் சரி இல்லை. ஆவா என்ற பாதாளக்குழுவொன்று இருந்தது. கேரள கஞ்சா வருகின்றது. வீதித் தடைகளை நீக்கினால் தெற்கிலுள்ள பாதாளக்குழுக்கள் வடக்குக்குச் சென்று ஒளியக்கூடும். எனவே, பாதுகாப்பு நெறிமுறைகள் அவசியம்-என்றார். (ஏ-44)



சாவகச்சேரி கச்சாய் வீதி ஞானவீரபத்திரர் கோவில் அலங்காரத் திருவிழாவின் இறுதிநாள் நகர்வலம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது. (ச-25,9)

### இராணுவத்தினர்

# காணிகளை விடுவித்தாலும் முட்டுக்கட்டையாக வேலிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 1

காங்கேசன்துறையில் நூலகத்தையும் பிரதேசசபைக்குரிய தலைமை அலுவலகத்தையும் அமைக்கவேண்டிய தேவையுள்ளது என்று வலி. வடக்குப் பிரதேசசபைக் கன்னி அமர்வில் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்துள்ளார். 2024ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட காணிகளிலிருந்து இதுவரை வேலி அகற்றப்படவில்லை. மீள் குடியேற்றத்துக்காக நிதிகள் ஒதுக்கப்பட்டாலும் குறித்த பிரதேசத்தினுள் மக்கள் செல்லமுடியாதநிலை தொடர்வதுடன் அபிவிருத்திகளையும் மேற்கொள்ளமுடியாதுள்ளது. மக்களுக்கான மின் இணைப்பைப் பெறுவதற்குங்கூட இராணுவப் பாதுகாப்பு வேலிகள் அகற்றப்படவேண்டிய தேவையுள்ளது. இதனை அகற்றுமாறு புதிய இராணுவத் தளபதியிடம் வடமாகாண ஆளுநரும் கோரிக்கையை முன்வைத்துள்ளார். கடந்த சில நாள்களாக மயிலிட்டியிலும் காணி விடுவிப்புக்கான போராட்டம் நடைபெற்றது. காணிகளை மீட்க சாதகமான விடயங்களை மேற்கொண்டு இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள மக்களின் காணிகள், வருமானம் ஈட்டும் மூலங்கள் மற்றும் ஆலயங்கள் என்பவற்றை மீட்க அனைவரும் இணைந்து செயற்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

## 9ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 . 07 . 1943

உதிர்வு 10 . 07 . 2016



இணுவில் மேற்கைச் சேர்ந்த

**அமரர் ஆழ்வாப்பிள்ளை சின்னாச்சி**

திதி: வளர்பிறை ஷஷ்டி (01.07.2025)

அம்மா, உங்கள் நினைவுகள் இதயத்தில் நிழலாய் தங்கியுள்ளன
உங்கள் சிரிப்பு சூரியனாய் எம் நாளை ஒளியேற்றுகிறது
உங்கள் கரம் இல்லாத எம் வாழ்க்கைப் பாதை வெறுமையாகிறது
நீங்கள் சொல்லாத வார்த்தைகள் இப்போது கண்ணீராய் உரைகிறது.
நீங்கள் போன பின்பும், எம் வாழ்வில் நீங்கள் போகவில்லை அம்மா.

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்

ஆ.சிறிதரன் (ஜேர்மனி)

உங்கள் பிரவின் துயரால் வாடும் பிள்ளைகள்

(CS 58728) E

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 02 . 1943

மறைவு 26 . 06 . 2025



**தம்பித்துரை பத்மநாதன்**

(OLD BOY OF ST. JOHN'S & COLLEGE)

யாழ் கரம்பனைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் எகலியகொட, லண்டன், கனடா Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பித்துரை பத்மநாதன் அவர்கள் கடந்த (26.06.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் எகலியகொட பிரபல வர்த்தகர் காலஞ்சென்றவர்களான மு.தம்பித்துரை - மகேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வரும், புங்குடுதீவு கிழக்கைச் சேர்ந்த திரு.திருமதி சின்னத்துரை (விதானையார்) தம்பதியரின் மருமகனும், மங்கையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான பேரின்பமணி, பாலச்சந்திரன் (Newyork), பாலகிருஷ்ணன் (ஆசிரியர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மற்றும் ராதா றூபா (ஜெர்மனி), சாந்தி (Toronto canada) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா Toronto வில் (02.07.2025) புதன்கிழமை நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மங்கை (மனைவி) - 001 647 924 2218
பாலா - 001 347 209 4319
சாந்தி - 001 647 455 3076

தகவல்: மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒளிரும் சூரியன் வெளியீடு

கிளிநொச்சி, ஜூலை 1
பனையின் பொருளாதாரத்தை மையப்பொருளாகக்கொண்டு ஒளிரும் சூரியன் மாதாந்தப் பத்திரிகை வெளியீடு கிளிநொச்சி ஜெயந்திபுரம் சிவனருள் இல்லத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் ஓய்வுநிலை விரிவுரையாளருமான பார்த்தீபன் நூலை வெளியிட்டுவைக்க கிளிநொச்சி பனை அபிவிருத்திசபை முகாமையாளர் வீ.பார்த்தீபன் பெற்றுக்கொண்டார். கிளிநொச்சி இந்துக் கல்லூரி அதிபர் திருமதி இ.மீனலோயினி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி பனை அபிவிருத்திசபை முகாமையாளர் வீ.பார்த்தீபன், கௌரவ விருந்தினர்களாக கிளிநொச்சி தமிழ்ச்சங்க நிறுவுநர் வேலுப்பிள்ளை இறைபிள்ளை, ஆசிரியரும் கலைப் படைப்பாளியுமான சாந்தனுர் அப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-19)



கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தொழில் நிமித்தம் வெளிநாடு சென்று நாடு திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்களை இலக்காகக்கொண்டு சுயதொழில் ஆரம்பித்தல் அல்லது தற்போது மேற்கொண்டுவரும் சுயதொழிலினை மேம்படுத்துவதற்கான பயிற்சிநெறி, கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்டச்செயலக திறன்விருத்தி மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-25,9)



வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமி பரம்பரை ஆலய (வல்வை சிவன் ஆலயம்) பிரதம குருவாக நீண்டகாலம் இறைசேவை செய்த மறைந்த சிவஸ்ரீ பரமேஸ்வரக் குருக்கள் மனோகரக் குருக்களின் ஆத்ம அஞ்சலி நிகழ்வு வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச-25 100)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களை விழிப்பூட்டும்வகையில் "பேறுகால உள நலம்" தொடர்பான பயிற்சிநெறி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. பயிற்சிநெறியில் வளவாளராக உள நல மருத்துவ நிபுணர் சி.சிவதாஸ், ஏற்பாட்டாளராக மூத்த ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,9)





# களை நெல் கட்டுப்பாடு விளக்கமளிக்கும் நிகழ்வு

வவுனியா, ஜூலை 1
விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வயல் நிலங்களில் பரவிவரும் களை நெல்லைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வு, வவுனியா தாண்டிக்குளத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. பரந்தன் நெல் ஆராய்ச்சிசபையின் ஆராய்ச்சியாளர் ந.பமித்திராவினால் நெற் களைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது. வவுனியாப் பிரதி விவசாயப்பணிப்பாளர் திருமதி மாலினி முரளீதரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விவசாயிகள், கமக்கார அமைப்பின் முக்கியஸ்தர்கள், பிரதி விவசாய பணிமனையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,110)



# செயலமர்வு !

யாழ்ப்பாணம் , ஜூலை 1
போதைப்பொருள் தடுப்புத் தொடர்பான செயலமர்வு உதவி மாவட்டச் செயலர் செல்வி உ.தர்சினி தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெற்றது. போதைப்பொருள் தடுப்புச் செயற்றிட்டங்களை கிராம மக்களுக்குக் கொண்டு செல்வதன் ஊடாகச் சமூக மாற்றங்களை அளவிடுதல்தொடர்பாக முதலாம் கட்டப் பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கான இரண்டாம் கட்டப் பயிற்சியின் முன்னாயத்தச் செயலமர்வாக க்குறித்த செயலமர்வு அமைந்தது. (ச-22,66)

யாழ்.மாவட்ட

# புதிய விமானப் படைத்தளபதி வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ்.மாவட்ட விமானப் படைத்தளபதியாகப் புதிதாகப் பொறுப்பேற்ற குறூப் கப்டன் செனவிரத்ன கடந்த வெள்ளிக்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org